# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 50 — 1973 මාර්තු 09 වැනි සිකුරාදා — 1973.03.09

50 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு மாச்சு மாதம் 09 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 227 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 246 |


## பதவிகள் — வெற்றிடம்

### " ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பது அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்காக நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச்சம்பளத்தில் இல்லாதவர்களையொழித்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்ததப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

---

### முக்கிய அறிவித்தல்

**ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்**கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்**திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.**

**எல். டபிள்யூ. பி. பீரிஸ்,**
**அரசாங்க அழுத்தகர்.**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**கொழும்பு,**
1972 ம் ஆடு திசெம்பர் மீ 15 ந் உ.

குறிப்பு.—சிங்கள மொழி மூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில், ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவும் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிகான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

வீடமைப்பு நிர்மாண அமைச்சு

நிகழ்ச்சித்திட்ட சிரேட்ட பிரதிப் பணிப்பாளர் உதவி

வீடமைப்பு நிர்மாண அமைச்சில் நிகழ்ச்சித்திட்ட சிரேட்ட பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டிருக்கும் மாதிரிப்படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பின்வரும் தேதிகளின்றோ அதற்கு முன்னரோ செயலாளர், வீடமைப்பு நிர்மாண அமைச்சு, திருன்ஸ்வேக்ஸ் வீடு, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு வந்தடையவேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் :—1973 மார்ச்சு 30.

(ஆ) கடல்கடந்த விண்ணப்பங்கள் :—1973 ஏப்ரல் 09.

குறிப்பு.—(i) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறுமிடத்து அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித்தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனால்வரும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(ii) கடல்கடந்த அபேட்சகர்கள் அவர்கள் விரும்பினால், அந்நாட்டிலுள்ள அல்லது தாம் வதியும் நாட்டுக்கண்மையில் இருக்கும் நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் அலுவலகங்களில் இலங்கை வீடமைப்பு நிர்மாண அமைச்சின் செயலாளருக்கு தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு குறிப்பிட்ட தேதிக்குமுன் விணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(iii) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கைக் குடியரசின் கீழ் நியமனம் பெற வெளிநாட்டில் தேந்தெடுக்கப்படும் இலங்கையரான உத்தியோகத்தர், சேவைக்கு உடற்றகுதி உடையவரென்பதை உறுதிப்படுத்தற்பொருட்டு, தம்மை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழில் செய்வோரால் சோதிக்கப்படுவதற்கு உடன்படுமாறு வேண்டப்படுவர். இத்தகைய சோதனைக்கான கட்டணமும், இலங்கைக்கு வருவதற்கு ஏற்படும் பிரயாணச் செலவும் உத்தியோகத்தராலேயே செலுத்தப்படவேண்டும்.

2. ஒப்பந்த நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.—பதவி நிரந்தரமானதும், இளைபாற்றுச் சம்பளம் அற்றதுமாகும். நியமனம் 3 ஆண்டுக்காலத்துக்குத் தகுதிகாண் முறையில் இருக்கும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசாங்க சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தவேண்டும். எனினும், நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவதுமான பதவியிலுள்ள ஒரு உத்தியோகத்தர் தெரியப்படுமிடத்து, இப்புதிய பதவியிலும் தொடர்ந்து இளைப்பாற்றுச் சம்பளத்தைப்பெறும் வாய்ப்புடையவராவர். நியமனம் முதற்கண் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பதில் கடமையாற்ற வேண்டிய நிலையில் இருக்கும். பதவிக்குத் தகைமையற்றவரென அவர் காணப்படின் இப்பருவத்தின் எக்காலத்திலும் அவரின் முந்திய பதவிக்கு மாற்றப்படலாம்.

3. சம்பளமும் படிகளும்.—இப்பதவிக்குத் திரட்டிய சம்பளத் திட்டம் பின்வருமாறு.— ரூபா 18,840—2×600—ரூபா 20,040. ஆண்டொன்றுக்கு.

4. தேவைப்படும் தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வருவனவற்றைத் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவவேண்டும்.—

(அ) 1973 மார்ச்சு 30 ம் தேதியன்று 25 வயதுக்கு குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (இவ்வயதெல்லைகள் ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளளோருக்குப் பொருந்தா)

(ஆ) முழு தொழிற்தகைமைகளுடன்: ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் சிவில் எந்திரவியல் வேலையின் திட்டமிடலும் நிகழ்ச்சித் திட்டமிடலும் உட்பட ஒரு எந்திரியாகக் குறைந்தது 10 வருட அனுபவம் உள்ளவராயும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—கட்டட, வேறு சிவில் எந்திரவியல் அமைப்பு வேலைகளிற் தீவிரமாகப் பங்குபற்றும் அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும், அல்லது
பின்வரும் கணக்கியல் குழுக்களின் ஒன்றினது ஒரு அங்கத்தவராய் இருந்தால்—

(அ) செலவு முகாமைக் கணக்காளர் நிலையம், லண்டன்.

(ஆ) வரைவுபெற்ற கணக்காளர் நிலையம், ல்ண்டன்.

(இ) ஸ்ரீலங்கா வரைவுபெற்ற கணக்காளர் நிலையம்.

அத்துடன், கண்க்காளராக 12 வருட அனுபவம் உள்ளவரும், அதிற்குறைந்தது 4 வருடங்கள் மேற்படிப்புத் தொழிற் தகைமைகளும் அனுபவமும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—பொது நிதிமுகாமை, முகாமைத்திட்டமிடல், கட்டுப் பாட்டுமுறை ஆகியவற்றில் பயிற்சி பெற்றுள்ளவரும், அமைப்பதிலும் கண்காணிப்பதிலும், நிதிப் புள்ளிவிபர வியல் படிப்புக்களைச் செலுத்துவதிலும் உள்ள கடமை களுக்குத் தகுதிவாய்ந்த விசேட அனுபவம் உள்ளவரும் ஆன அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அல்லது, ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தி லிருந்து பொருளாதாரவியலில் முதல் அல்லது இரண் டாம் வகுப்பு விசேட பட்டம் உள்ளவராயும், 1 ம் வகுப் புப் பட்டம் பெற்ற பின்னர் குறைந்தது 10 வருட அனு பவமுள்ளவராயும் இருத்தல்வேண்டும்.

குறிப்பு.—இயைபான துறையில் பட்டதாரி மேற்படிப்புத் தகை மையுள்ள அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப் படும்.

5. கேட்கப்படும்பொழுது, தனித்த அல்லது பின்வரும் எல்லாப் பத்திரங்களையும் சமர்ப்பிக்குமாறு அபேட்சகர் வேண்டப்படுவர்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்.

(ஆ) உயர்ந்த கல்வி அல்லது பட்டச் சான்றிதழ்.

(இ) உயர்தொழிற்றகைமைச் சான்றிதழ் அல்லது தொழில்நுட் பத் தகைமைச் சான்றிதழ் அல்லது இரண்டும்.

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்து பெற்ற உயர்ந்த தேர்வுச் சான்றிதழ்.

குறிப்பு—(i) விண்ணப்பப்படிவத்துடன் எச்சாதனமோ, இணைக் கப்படலாகாது.

(ii) கேட்கப்படும்பொழுது சாதனங்களை வழங்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவ னிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தரிடமிருந்து விண் ணப்பங்கள் அவ்வத் திணைக்களத்தின் தலைவரினூடாக அனுப்பப் படல் வேண்டும். எனினும் அவர்களது விண்ணப்பத்தை வீட மைப்பு, நிர்மாண அமைச்சின் செயலாளருக்கு, முடிவுதேதியன்று அல்லது அதற்கு முன்னர் அவரைச் சென்றடையுமாறு நேராக அனுப்பவேண்டும்.

7. விண்ணப்பங்களும்வேறு கடிதத் தொடர்புகளும் வீட்மைப்பு, நிர்மாண அமைச்சின் செயலாளருக்கு முகவரியிட்டு அனுப் பப்பட வேண்டுமன்றி இவ்வமைச்சைச் சேர்ந்த எவ்வுத்தியோகத் தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பப்படலாகா.

8. இவ்வர்த்தமானியின் பகுதி I தொகுதி (IIஅ) இன் தொடக் கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கைக் குடியரசுச் சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளின் கவனத்தைக் கோருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

9. விண்ணப்பங்கள் முடிவுறுத் திகதியிலிருந்து 3 வாரங்களுக் குள் விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமைப்பற்றி அபேட்கருக்கு அறிவிக்கப்படும். ஒப்புதற் கடிதம் பெருவிடின் கொழும்பு 1, திருன்ஸ்வேக்ஸ் வீடு, வீடமைப்பு, நிர்மாண அமைச்சின் செயலாள ருக்கு உடனே அறிவிக்கவேண்டும்.

ஏ. எம். என். அமரக்கோன்,
செயலாளர்,
வீடமைப்பு, நிர்மாண அமைச்சு.

வீடமைப்பு, நிர்மாண அமைச்சு,
திருன்ஸ்வேக்ஸ் வீடு,
கொழும்பு 1,
1973, பெப்ருவரி, 27.

நிகழ்ச்சித்திட்ட சிரேட்ட பிரதிப்பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பப் படிவம்

1. முழுப்பெயர் :————.
2. முகவரி :————.
3. பிறந்த திகதியும் இடமும் :————.
(1973, மார்ச்சு 30, இல் வயது :————, ஆண்டு :————. மாதம் :————, நாள் :————.
4. சாதியம் :————.
5. விவாகமானவரா தனியாரா ? :————.
6. கல்வித்தகைமைகள் :————.
7. தொழிற்றுறைத் தகைமைகள் :————.
8. பாடசாலையை விட்டதிலிருந்து இதுவரை பார்த்த தொழி லும்/அல்லது பயிற்சியும் :————.
(தொழிலிலமர்ந்த திகதியும் விட்ட திகதியும் விடுவதற் கான காரணங்களும் குறிப்பிடவேண்டும்).
9. தற்போதைய வேலை :————.
10. நற்சான்றிதழ்கள் தந்தவர்களின் பெயர்களும் பதவிப் பெயர் களும் :————.
11. வேறு ஏதாவது தகைமைகள் :————.

விண்ணப்பத்தில் தந்த விபரங்கள் உண்மையானவையும், செம் மையானவையுமென யான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கே தந்துள்ள விபரங்களுள் எவையாவது பொய்யானவையோ வெனச் சரியற்றவையோவெனக் காணப்பட்டால் தெரிவுக்கு முன் னர் யான் தகைமை நீக்கத்துக்கு ஆட்படலாமென்றும் நியமனம் பெற்றபின் விபரச் சரியின்மை கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு ஏதுவுமின்றி வேலை நீக்கத்துக்கு ஆட்படலாமென்றும் அறிந்துள் ளேன்.

விண்ணப்பக்காரரின்கையொப்பம்.

திகதி :————.

3-408/1—09.03.73ந் திகதிய வர்த்தமானி இல. 50

---

## வீடமைப்பு நிர்மாண அமைச்சு

### நிகழ்ச்சித்திட்ட உதவிப் பணிப்பாளர் பதவி

வீடமைப்பு நிர்மாண அமைச்சில் நிகழ்ச்சித்திட்ட உதவிப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டிருக்கும் மாதிரிப்படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பின்வரும் தேதிகளிலன்றோ அதற்கு முன்னரோ செயலாளர், வீடமைப்பு நிர்மாண அமைச்சு, திருன்ஸ்வேக்ஸ் வீடு, கொழும்பு 1 என்ற விலாசத்தை வந்தடையவேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள்—1973 மார்ச்சு 30.

(ஆ) கடல்கடந்த விண்ணப்பங்கள்—1973 ஏப்ரல் 9.

குறிப்பு.—(i) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படி வம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறுமிடத்து அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவ னிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடை சித் தேதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனல்வரும் இடருக் குத் தாமே பொறுப்பாவர்.

(ii) கடல்கடந்த அபேட்சகர்கள் அவர்கள் விரும்பினுல், அந் நாட்டிலுள்ள அல்லது தாம் வதியும் நாட்டுக்கண்மையில் இருக் கும் நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் அலுவலகங்களில் இலங்கை வீடமைப்பு, நிர்மாண அமைச்சின் செயலாளருக்கு தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு குறிப்பிட்ட தேதிக்குமுன் விண்ணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(iii) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கைக் குடியரசின் கீழ் நியமனம் பெற வெளிநாட்டில் தேர்ந்தெடுக்கப் படும் இலங்கையரான உத்தியோகத்தர், சேவைக்கு உடற்றகுதி உடையவரென்பதை உறுதிப்படுத்தற்பொருட்டு, தம்மை, அங்கீ கரிக்கப்பட்ட மருத்துவத் தொழில் செய்வோரால் சோதிக்கப் படுவதற்கு உடன்படுமாறு வேண்டப்படுவர். இத்தகைய சோத னைக்கான கட்டணமும், இலங்கைக்கு வருவதற்கு ஏற்படும் பிர யாணச் செலவும் உத்தியோகத்தரலேயே செலுத்தப்படவேண் டும்.

2. ஒப்பந்த நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.—பதவி நிரந் தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் அற்றதுமாகும். நியமனம 3 ஆண்டுக்காலத்துக்குத் தகுதிகாண் முறையில் இருக்கும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசாங்க சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தவேண்டும். எனினும், நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவதுமான பதவியிலுள்ள ஒரு உத்தியோகத்தர் தெரியப்படுமிடத்து, இப்புதிய பதவியிலும் தொடர்ந்து இளைப்பாற்றுச் சம்பளத்தைப் பெறும் வாய்ப்புடைய வராவர். நியமனம் முதற்கண் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பதில் கடமையாற்றவேண்டிய நிலையில் இருக்கும். பதவிக்குத் தகைமையற்றவரென அவர் காணப்படின் இப்பருவத்தின் எக் காலத்திலும் அவரின் முந்திய பதவிக்கு மாற்றப்படலாம்.

3. சம்பளங்களும் படிகளும்—இப்பதவிக்குரிய திரட்டிய சம் பளத் திட்டம் பின்வருமாறு :—

ரூபா 10,080—13 × 480 × ரூபா 16,320 ஆண்டொன்றுக்கு.

4. தேவைப்பட்ட தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வருவனவற்றைத் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவவேண் டும் :—

(அ) 1973 மார்ச்சு 30 ம் தேதியன்று 25 வயதுக்குக் குறை யாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (இவ்வயதெல்லைகள் ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ளோருக்குப் பொருந்தா).

(ஆ) பொருளாதாரவியல், வர்த்தகம், கணிதம், புள்ளிவிபரவியல், பௌதிக விஞ்ஞானம், அல்லது சிவில் எந்திரவியல் ஆகிய பாடங்களில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு விசேட பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டம் பெற்றுள்ளவராய் இருத்தல் வேண்டும்.

குறிப்பு : அமைத்தல், மேற்பார்வை செய்தல், பொருளாதார, புள்ளிவிபரவியல் படிப்புகளை பணித்தற்குத் தகுதி வாய்ந்த விசேட அனுபவத்தைப் பெற்றுள்ள அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

5. கேட்கப்படும்பொழுது, தனித்த அல்லது பின்வரும் எல்லாப் பத்திரங்களையும் சமர்ப்பிக்குமாறு அபேட்சகர் வேண்டப்படுவர்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்.

(ஆ) உயர்ந்த கல்வி அல்லது பட்டச் சான்றிதழ்.

(இ) உயர் தொழிற்றகைமைச் சான்றிதழ் அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ் அல்லது இரண்டும்.

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்து பெற்ற உயர்ந்த தேர்வுச் சான்றிதழ்.

குறிப்பு :—(i) விண்ணப்பப்படிவத்துடன் எச்சாதனமோ, இணைக்கப்படலாகாது.

(ii) கேட்கப்படும்பொழுது சாதனங்களை வழங்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தரிடமிருந்து விண்ணப்பங்கள் அவ்வத் திணைக்களத்தின் தலைவரினூடாக அனுப்பப்படல் வேண்டும். எனினும் அவர்களது விண்ணப்பத்தை வீடமைப்பு, நிர்மாண அமைச்சின் செயலாளருக்கு, முடிவுதேதியன்று அல்லது அதற்கு முன்னர் அவரைச் சென்றடையுமாறு நேராக அனுப்பவேண்டும்.

7. விண்ணப்பங்களும் வேறு கடிதத் தொடர்புகளும் வீடமைப்பு நிர்மாண அமைச்சின் செயலாளருக்கு முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டுமன்றி இவ்வமைச்சைச் சேர்ந்த எவ்வுத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பப்படலாகா.

8. இவ்வர்த்தமானியின் பகுதி I தொகுதி (IIஅ) இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கைக் குடியரசுச் சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளின் கவனத்தைக் கோருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

9. விண்ணப்பங்கள் முடிவுறுந் திகதியிலிருந்து 3 வாரங்களுக்குள் விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமைபற்றி அபேட்சகருக்கு அறிவிக்கப்படும். ஒப்புதற் கடிதம் பெறுவிடின், கொழும்பு 1, திருன்ஸ்வேக்ஸ் வீடு, வீடமைப்பு நிர்மாண அமைச்சின் செயலாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும்.

ஏ. எம். என். அமரக்கோன்,
செயலாளர்,
வீடமைப்பு, நிர்மாண அமைச்சு.

வீடமைப்பு, நிர்மாண அமைச்சு,
திருன்ஸ்வேக்ஸ் வீடு,
கொழும்பு 1,
1973, பெப்ருவரி, 27.

**நிகழ்ச்சித்திட்ட உதவிப் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பப் படிவம்**

1. முழுப்பெயர் :————.
2. முகவரி :————.
3. பிறந்த திகதியும் இடமும் :————.
(1973, மார்ச்சு 30, இல் வயது :———— ஆண்டு :————. மாதம் :————. நாள் :————.
4. சாதியம் :————.
5. விவாகமானவரா ? தனியாளரா ? :————.
6. கல்வித் தகைமைகள் :————.
7. தொழிற்றுறைத் தகைமைகள் :————.
8. பாடசாலையை விட்டதிலிருந்து இதுவரை பார்த்து தொழிலும் அல்லது/பயிற்சியும் :————.
(தொழிலிலமர்ந்த திகதியும் விட்ட திகதியும் விடுவதற்கான காரணங்களும் குறிப்பிட வேண்டும்.)
9. தற்போதைய வேலை :————.
10. நற்சான்றிதழ்கள் தந்தவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் :————.
11. வேறு ஏதாவது தகைமைகள் :————.

விண்ணப்பத்தில் தந்த விபரங்கள் உண்மையானவையும், செம்மையானவையுமென யான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கே தந்துள்ள விபரங்களுள் எவையாவது பொய்யானவையோவெனக் சரியற்றவையோவெனக் காணப்பட்டால் தெரிவுக்கு முன்னர் யான் தகைமை நீக்கத்துக்கு ஆட்படலாமென்றும் நியமனம் பெற்றபின் விபரச் சரியின்மை கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கு ஆட்படலாமென்றும் அறிந்துள்ளேன்.

விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

3-408/2—09.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 50

---

**ஸ்ரீலங்கா தரைப்படை—பிறவரிசையினர் நியமனம்**

ஸ்ரீலங்கா தரைப்படையின் நிரந்தரப்படையில் நேரடியான போர் வீரர்களாகச் சேருவதற்கான ஆளின்மைகள் உள்ளன. கீழே தரப்பட்டிருக்கும் நியமனங்கள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நியமனம்**

(அ) தனிப்பட்ட—பான்ட் வாத்தியகாரர் ஹெவிஸி பான்ட், ஸ்ரீலங்கா தரைப்படைப் பொதுச் சேவைச் சிறப்பணி

**தேவையான விசேட தகைமைகள்**

(i) கீழைத்தேச இசையில் "காந்தர்வ" (பாடத்தில்) த்தில் ஒரு சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

அல்லது

க. பொ. த. (சா. த.) ல் இசைப் பாடத்தில் ஒரு சித்தி

அத்துடன்

(ii) "தேசிய பெற" வாசிக்கக்கூடியவராயும் அல்லது "தேசிய வண்ணம்", "ஜனகி" ஆதியவற்றை பாட அல்லது வாசிக்கக்கூடியவராயும் இருத்தல் வேண்டும். புல்லாங்குழல், சித்தார், வயலின் அல்லது தப்லா வாசிக்கக்கூடியோருக்கும் அத்துடன் மேற்போந்த (i) இல் தொடர்புறுத்தப்பெற்ற பரீட்சைகளுள் ஒன்றில் புல்லாங்குழல், சித்தார் அல்லது வயலின் வாசித்தலில் ஒரு சித்தி அடைந்துள்ளோருக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

**ஆகக்குறைந்த கல்வித் தகைமைகள்.**—சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஜே.எஸ்.சி. அல்லது இதற்குச் சமமான வேறும் எந்தப் பரீட்சைகளிலாவது சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

(ஆ) தனிப்பட்ட பான்ட் வாத்தியக்காரர், மேலைத்தேய பான்ட்கள் ஸ்ரீலங்கா தடைப்புடைப் பொதுச் சேவைச் சிறப்பணி

(இ) தனிப்பட்ட பியூக்லர்/மேளமடிப்பவர், மேளமும் ஃபைஃப் உம் கொண்ட பான்ட்கள், ஸ்ரீலங்கா சிறு காலாட்படை

(i) காத்திரமான, இயற்கையான முறப்ப்களையும், நன்கு இயங்கும் கைகளையும், விரல்களையும் உடையோராய் இருத்தல் வேண்டும். கண்பார்வை நல்லதாக இருத்தல் வேண்டும்.

(ii) இசையின் பாலான உளச்சார்பு பற்றிய ஒரு சோதனையில் சித்தி பெறக்கூடியவராக இருத்தல் வேண்டும்—அதாவது, லயம், சுருதி அறிதல், இசை அடையாளங்களை (மேலைத்தேய இசைக் குறியீடுகளை) வாசிக்கக்கூடிய—

அல்லது

கொடுக்கப்பெறும் மேலைத்தேய இசைக் குறியீட்டுத் தாள் ஒன்றிற்கு இயைய பியூக்ள் ஊத அல்லது மேலைத்தேய மேளம் ஒன்றை வாசிக்க அல்லது மேலைத்தேய புல்லாங்குழல் ஒன்றை வாசிக்கக்கூடிய அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**ஆகக்குறைந்த கல்வித் தகைமைகள்.—**சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஜே.எஸ்.சி. அல்லது இதற்குச் சமமான வேறும் எந்தப் பரீட்சைகளிலாவது சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—விண்ணப்பகாரர்கள், தம்விண்ணப்பங்களைத் தாயர் செய்யும்பொழுது கூறு, நியமனம் என்பவற்றைத் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

2. விண்ணப்பகாரர்களின் தகைமைகளை நிரூபிக்கும் பொருட்டு தேர்தலுக்குமுன் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

3. இவ்விளம்பரத்தின் முதலாம் பந்தியில் கேட்கப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பகாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. ஸ்ரீ லங்கா தரைப்படையில் நேரடியான போர் வீரர்களாகச் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு முதலாம் பந்தியில் கேட்கப்பட்டுள்ள விசேட தகைமைகளையும் மேலதிகமாக பின்வரும் பொது நிபந்தனைகளையும் விண்ணப்பகாரர்கள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

ஒரு விண்ணப்பகாரர்—

(அ) ஸ்ரீ லங்காப் பிரசையாய் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1973 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 9 ம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதுக்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) அரச கரும மொழியில் தேர்ச்சியுண்டு என்பதை தெளிவாக அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

(ஈ) ஸ்ரீ லங்கா தரைப்படைத் தளபதியின் திருப்திக்கேற்ப வைத்தியப் பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும்.

(உ) உயரத்தில் 5 அடி 4 அங்குலத்திற்குக் குறையாதவராய் இருத்தல் வேண்டும்.

எனினும் ஸ்ரீ லங்கா தரைப்படைத் தளபதியின் தீர்மானத்திற்கேற்ப தகுதியுடையவர்கள் எனக்காணப்படும் 5 அடி 4 அங்குலத்திற்குக் குறைந்த உயரம் உடையோரை சேர்த்துக்கொள்ளப்படும்.

5. இக்காலி ஸ்தானங்களைப் பூர்த்திசெய்யக் கோரும் இராணுவத்தில் இருந்து திரும்பியவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட பொது நிபந்தனைகட்கு மேலதிகமாக பின்வரும் நிபந்தனைகளையும் நிரூபித்தல் வேண்டும்.

(அ) ஸ்ரீ லங்கா பாதுகாப்புப் படையுடன் கூடிய பிரித்தானிய சாம்ராச்சிய இராணுவத்தின் படைகளில் ஒரு வருடகாலத்துக்குக் குறையாத சேவையுடையவராயும்,

(ஆ) சேவையில் இருந்து விலகியபோது அவரின் சேவைத் தரம் குறைந்தபட்சம் " மிக நன்று " என்றுதல் தரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

6. சேவைக்காலம்.—ஒரு போர்வீரர் சாதாரணமாக 12 வருடத்துக்குச் சேவைக்காகச் சேர்த்துக்கொள்ளப்படுவர். இதில் 5 வருட காலம் கட்டாய சேவையாகவும் 7 வருட காலம் மேற்படி படையின் ஒதுக்கச் சேவையிலும் சேர்த்துக்கொள்ளப்படுவர். இச்சேவைக்கால வரையறை முடிவில் சேவையில் இருந்து விலக்கப்படலாம். எனினும் குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் ஓர் போர்வீரர் தனது சேவைக்காலத்தை மேலும் 12 வருடங்களுக்கு நீட்டிக்கொள்ளலாம். இச் சேவைக்காலம் எல்லாமாக 32 வருடம் வரை சேவை செய்யக்கூடியதாகச் சேவைக்கு அனுமதிக்கப்படலாம்.

7. சம்பள விகிதமும் வாழ்க்கைச் செலவுப்படிகளும்.—ஸ்ரீ லங்கா தரைப்படையின் நிரந்தரப்படையின் பிற வரிசையினர்களுக்கான சம்பள விகிதமும் வாழ்க்கைச் செலவுப்படியும் பின்வருமாறுனதாகும் :—

(அ) பிரிவு III—தொழில் நுணுக்கமற்ற 1, 2, 3 ம் தாத்தினரும் பிரிவு "B" வகுப்பு 1, 2, 3 ம் தாத்தினரும் உட்பட தொழில் நுணுக்கம் உடையோரும்.

| வரிசை | முழுச்சம்பளம் (வருடம்) |
|---|---|
| படையினர் அல்லது சமமான | ரூபா 2,880—15 × 60—ரூபா 3,780 |
| லான்ஸ் கோபரல் அல்லது சமமான | ரூபா 3,060—15 × 60—ரூபா 3,960 |
| கோபரல் அல்லது சமமான ... | ரூபா 3,660—15 × 72—ரூபா 4,740 |
| சார்ஜன்ட் ... ... | ரூபா 4,620—10 × 90—ரூபா 5,520 |
| ஸ்டாப் சார்ஜன்ட் ... | ரூபா 5,010—10 × 90—ரூபா 5,910 |
| வரண்ட் உத்தியோகத்தர் II... | ரூபா 5,220—10 × 120—ரூபா 6,420 |
| றெஜிமெண்டல் குவாட்டர் மாஸ்டர் சார்ஜன்ட் ... | ரூபா 5,340—10 × 120—ரூபா 6,540 |
| வரண்ட் உத்தியோகத்தர் I ... | ரூபா 5,640—10 × 144—ரூபா 7,080 |

(ஆ) பிரிவு II—தொழில் நுணுக்கமுடைய பிரிவு "A" 1, 2, 3 ம் வகுப்புக்களைச் சேர்ந்தவர்கள் உட்பட.

| வரிசை | முழுச்சம்பளம் (வருடம்) |
|---|---|
| படையினர் அல்லது சமமான... | ரூபா 2,940—15 × 60—ரூபா 3,840 |
| லான்ஸ் கோபரல் அல்லது சமமான ... ... | ரூபா 3,120—15 × 60—ரூபா 4,020 |
| கோபரல் அல்லது சமமான ... | ரூபா 3,720—15 × 72—ரூபா 4,800 |
| சார்ஜன்ட் ... ... | ரூபா 4,800—10 × 90—ரூபா 5,700 |
| ஸ்டாப் சார்ஜன்ட் ... | ரூபா 5,250—10 × 120—ரூபா 6,150 |
| வரண்ட உத்தியோகத்தர் II ... | ரூபா 5,520—10 × 120—ரூபா 6,720 |
| ரெ.கு.மா.ச. ... ... | ரூபா 5,700—10 × 120—ரூபா 6,900 |
| வரண்ட் உத்தியோகத்தர் I ... | ரூபா 5,940—10 × 144—ரூபா 7,380 |

(இ) பிரிவு I—தொழில் நுணுக்கமுடைய பிரிவு "X" 1, 2, 3 ம் வகுப்புக்களைச் சேர்ந்தவர்கள் உட்பட.

| வரிசை | முழுச்சம்பளம் (வருடம்) |
|---|---|
| படையினர் அல்லது சமமான... | ரூபா 3,000—15 × 60—ரூபா 3,900 |
| லான்ஸ் கோபரல் அல்லது சமமான ... ... | ரூபா 3,240—15 × 60—ரூபா 4,140 |
| கோபரல் அல்லது சமமான ... | ரூபா 3,840—15 × 72—ரூபா 4,920 |
| சார்ஜன்ட் ... ... | ரூபா 4,920—10 × 90—ரூபா 5,820 |
| ஸ்டாப் சார்ஜன்ட் ... | ரூபா 5,340—10 × 90—ரூபா 6,240 |
| வரண்ட் உத்தியோகத்தர் II ... | ரூபா 5,700—10 × 120—ரூபா 6,900 |
| ரெ.கு.மா.ச. ... | ரூபா 5,880—10 × 120—ரூபா 7,080 |
| வரண்ட் உத்தியோகத்தர் I ... | ரூபா 6,120—10 × 144—ரூபா 7,560 |

(ஈ) விவாகமான பிற வரிசையினருக்கான வாழ்க்கைச் செலவு படி.—விவாகமான பிறவரிசையினருக்கு பொது ஊழியருக்குப் போன்ற முறையிலான விகிதமான வாழ்க்கைச் செலவுபடி வழங்கப்படும்.

(உ) சலவைச் செலவுபடி.—(1) பாசறையில் வசிக்கும் போர் வீரர்களுக்கு தம் இராணுவ உடைகளை ஸ்ரீ லங்கா தரைப்படையின் செலவில் இலவசமாகச் சலவைசெய்து கொள்ள அருகதை உடையவராவார்கள்.

(2) பாசறைக்கு வெளியே வசிக்கும் போர்வீரர்கள் ஸ்ரீ லங்கா தரைப்படைத் தளபதியினால் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் தனது இராணுவ உடைகளைச் சலவை செய்து கொள்வதற்காக ஒரு சலவைச் செலவுபடியைப் பெற அருகதை உடையவர்களாவார்கள்.

(ஊ) கீழ்க்காணும் வகையிலான நன்நடத்தைப்படி ஒன்றிற்குப் பிறவரிசையினர் அருகதை உடையவர்களாவார்கள்.

1 ம் பதக்கம்—4 வருடகால சேவை முடிவுக்குப்பின்—நாளொன்றுக்கு 25 சதம்.

2 ம் பதக்கம்—8 வருடகால சேவை முடிவுக்குப்பின்—நாளொன்றுக்கு 50 சதம்.

3 ம் பதக்கம்—12 வருடகால சேவை முடிவுக்குப்பின்—நாளொன்றுக்கு 75 சதம்.

(எ) கீழ்காணும் இடங்களில் சேவைக்கு அமர்த்தப்படும் பிற வரிசையினருக்கு கஷ்டப்பணிப்படியொன்றும் வழங்கப்படும்.

(1) மன்னார், யாழ்ப்பாணம், ஆகிய இடங்களில் உள்ள கள்ளக்கடத்தல் குடியேற்றத்தடுப்பு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டால்.

(2) வளவை, பதவிய, முதியன்கட்டுக்குளம் ஆகிய இடங்களில் உள்ள விவசாய வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டால்.

(3) ஸ்ரீ லங்கா தரைப்படைத் தளபதியினால் நிர்ணயிக்கப்பட்ட பொறியியல் நிர்மாண வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டால்.

(ஏ) அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவுதொகை.—ஒவ்வொரு போர்வீரரும், போர்வீரராகத் திரட்டிக் கொள்ளப்பட்டதும் அரசாங்க சேவைச் சகாய நிதிக்குத் தனது உதவு தொகையாகத் தனது ஒன்றுதிரட்டிய சம்பளத்தின் ஆறு சதவீதத்தைக் கழித்தற்கு எழுத்துருவிலான தனது சம்மதத்தைக் கொடுக்குமாறு வேண்டப்படக்கடவர்.

8. இவ்வறிவித்தலின் 1 ம் பந்தியில் குறிக்கப்பட்டுள்ளபடி நேரடியான போர்வீரர் காலி ஸ்தானங்களுக்கு விண்ணப்பிக்கும், விண்ணப்பங்கள் யாவும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் யாவும் இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தினைப் போன்றதாகவும், விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பகாரர்களின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டதாயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள், ஸ்ரீ லங்கா தரைப்படை ஆள்திரட்டும் அதிகாரி, ஸ்ரீ லங்கா தரைப்படைத் தலைமை நிலையம், அஞ்சல் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்திலும் அவற்றை அனுப்பும் உறையிலும் "நிரந்தரப்படையில் சேருவதற்கான விண்ணப்பம்—பிறவரிசையினர்" என்று குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 1973 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 9 ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் மேற்படி முகவரிக்குச் சேரவேண்டும்.

(இ) ஒன்றுக்கு மேற்பட்ட நியமனம் கோரி விண்ணப்பங்கள் அனுப்பப்படலாம், அப்படியாயின் ஒவ்வொரு நியமனத்திற்கும் வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ஈ) பின்வரும் சான்றுப்பத்திரங்களின் பிரதிகள் மட்டும் விண்ணப்பங்களுடன் இணைத்திருத்தல் வேண்டும்.

(1) பிறப்புச்சான்றுப்பத்திரம் (அல்லது பிறப்பு பதிவு செய்யப்படாத விண்ணப்பகாரர்களைப் பொறுத்த வரையில்) பிரதம பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட விசேட வயதுச் சான்றுப்பத்திரம். ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கு அமையக் கொடுக்கப்பட்ட பிறப்புச்சான்றுப்பத்திரங்கள் அல்லது இது போன்ற வேறும் பிறப்புக் குறிப்புக்கள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(2) பெற்றுக்கொள்ளப்பட்ட ஆகக்கூடிய கல்வித் தகைமைகளைக்காட்டும் கல்வித் தராதரப்பத்திரம்.

(3) தொழில் அனுபவத்தைக் குறிக்கும் சான்றிதழ்.

(4) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்டனவும் விண்ணப்பகாரரின் கல்வித் தாரதரம், நடத்தை விண்ணப்பிக்கும் பதவிக்கான தகுதி என்பன பற்றிக் குறிக்கும் மூன்று நற்சான்றுப்பத்திரங்கள். ஒரு விண்ணப்பகாரர் ஏற்கனவே தொழில் செய்பவரானால் இதில் ஒன்று அவரது தற்போதைய மேல் அதிகாரியால் கொடுக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

(5) விளையாட்டு, பயிலுநர் சிறப்பணிப் பயிற்சிகள் சம்பந்தமான சான்றிதழ்கள்.

(6) ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பப்படுமாயின், ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் 8 ம் பந்தியின் (ஈ) (1), (2), (3), (4), (5) ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுப்பத்திரங்களின் பிரதிகள் இணைத்திருத்தல் வேண்டும்.

குறிப்பு.—(1) விண்ணப்பகாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் மட்டுமே இச்சான்றுப்பத்திரங்களின் உண்மைப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(2) விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்பியதால் தவறும் அல்லது காணுமல் போகும் எவ்விதமான தஸ்தாவேஜுகளின் உண்மைப் பிரதிகள் சம்பந்தமாக ஸ்ரீ லங்கா தரைப்படைத் தலைமை நிலையம் எந்த விதமான பொறுப்பும் ஏற்றுக்கொள்ள மாட்டாது.

(உ) தபாலில் அனுப்பியதால் தவறும் அல்லது தாமதமாகும் விண்ணப்பங்கள் சம்பந்தமாகச் செய்யப்படும் எந்தவிதமான முறைப்பீடுகளும் கவனிக்கப்படமாட்டாது.

(ஊ) ஸ்ரீ லங்கா தொண்டர் படையின் அங்கத்தவர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத்தலைவர்/பேரணித் தலைமை நிலையத்திற்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(எ) ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பவர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத்திற்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஏ) அரசாங்க திணைக்களத்திற்கூடாகச் சமர்ப்பிக்கப்பட்ட, ஆனால் உரிய காலத்திற்குப் பின் இத் தலைமை நிலையத்தில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்டவரையில், தாமதத்திற்குப் போதிய காரணங்களைக்காட்டி, விண்ணப்பங்கள் உரிய காலத்தில் தமது திணைக்களத்தில் கிடைத்ததென்றும் அது ஏற்றுக்கொள்ளப்படலாம் என்றும் திணைக்களத் தலைவரால் சிபாரிசு செய்யப்பட்டிராதவிடத்து, அத்தகைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஐ) ஸ்ரீ லங்கா தரைப்படைத் தெரிவுக் குழுவால் தகுதியுள்ளவர் எனக்கருதப்படும் விண்ணப்பகாரர்கள் தமது சொந்தச் செலவில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இவ்வாறு வேண்டப்படும் விண்ணப்பகாரருக்கு அவ்வாறுனவை பற்றி நேரம், காலம், இடம் என்பன தனித்தனியாக அறிவிக்கப்படும்.

(ஒ) நேர்முகப் பரீட்சைக்குப்பின் சேர்த்துக்கொள்ளத் தகைமையுடையவர் எனத் தெரிவுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரர்கள் தமது சொந்தச் செலவில் ஒன்று அல்லது பல வைத்தியப் பரிசோதனைகளுக்கு கொழும்பில் சமூகமளிக்கவேண்டும்.

ஓ) தேவையான பரிசோதனைகளும், நேர்முகப் பரீட்சைகளையும் தேர்ச்சியாய் முடித்த விண்ணப்பகாரர்கள் ஸ்ரீ லங்கா தரைப்படையின், நிரந்தரப்படையில் சேர்க்கப்பட்டு ஸ்ரீ லங்கா தரைப்படைப் பயிற்சிக் கல்லூரியில் அல்லது வேறேதேனும் இடத்தில் பயிற்சிக்காக அனுப்பப்படுவர்.

(ஔ) தமது பெற்றோரின் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலரின் சம்மதத்தை எழுத்து மூலம் சமர்ப்பித்தால் அன்றி எந்த ஒரு 21 வயதுக்குக் குறைந்தவரும் தரைப்படையின் நிரந்தரப்படையில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

(க) தெரிவு செய்யப்பட்டு தரைப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பகாரர்கள் அனைவரும் 1956 ம் வருட 33 ம் இலக்க அரசகருமமொழிச் செயல்முறைக் கட்டளைச் சட்டத்திற்கும், அச்சட்டத்தை அமுல் நடத்தும்வகையில் ஆன எல்லா கட்டளைச் சட்டங்களுக்கும் இது சம்பந்தமாய் இனிமேல் நடைமுறைக்கு வரும் கட்டளைச் சட்டங்களுக்கும் அடங்கி நடக்கவேண்டும் என்றும் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

(கா) எவரேனும் ஒருவர் விண்ணப்பகாரரைச் சிபாரிசு செய்ய விரும்பினுல் அவருக்கு ஒரு நற்சான்றுப்பத்திரம் கொடுப்பதன் மூலம் அவரைச் சிபாரிசுசெய்யலாம், அன்றி விண்ணப்பகாரர் தெரிவு பெறுவான் வேண்டி வேறெந்த வகையிலேனும் அவருக்காகப் பிரசாரம் செய்தல் அல்லது சலுகை பெற முயற்சித்தல் போன்ற வேறும் எத்தனங்கள், சம்பந்தப்பட்ட விண்ணப்பகாரரையும் அவரின் விண்ணப்பத்தையும் நிராகரித்தற்கு ஏற்ற ஏதுக்களாகும்.

(கி) விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எவையேனும் பிழையானவை என்று விண்ணப்பகாரர் தெரிவு பெறுவதற்கு முன் கண்டுபிடிக்கப்படின் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். ஸ்ரீ லங்கா தரைப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின் எப்போதாவது கண்டுபிடிக்கப்பட்டால், சம்பந்தப்பட்டவர் பேரில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஸ்ரீலங்கா தரைப்படையில் இருந்தும் விலக்கப்படுவர்.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
தரைப்படைத் தளபதிக்காக.

ஸ்ரீ லங்கா தரைப்படைத் தலைமை நிலையம்,
அஞ்சல் பெட்டி இலக்கம் 533,
கொழும்பு.

**ஸ்ரீ லங்கா தரைப்படையில் நிரந்தரப்படையில் பிற வரிசையின ராகச் சேருவதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம்**

| விண்ணப்பகாரர் பதிவுசெய்யப்பட்ட, தேசிய அரசுப் பேரவையின் வாக்காளர் தொகுதி : | விண்ணப்பகாரர் உட்படுத்தப் பட்டுள்ள நிருவாக மாவட்டம் : |
|---|---|

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) :————.
2. தபால் விலாசம் :————.
3. பிறந்த திகதி :————. வயது :————.
4. கல்வித்தகைமைகள் :————.
5. ஏந்த நியமனத்திற்காக விண்ணப்பம் செய்துள்ளீர் :————.
6. இந்நியமனம் சம்பந்தமாக 1 ம் பந்தியின் பிரகாரம் உமக் குரிய விசேட தகைமைகளையும் அனுபவங்களையும் குறிப் பிடுக :————.
7. பாடசாலையை அல்லது கல்லூரியை விட்டு விலகியபின் செய்த தொழில் :————.
8. உயரம் :—. அடி :————. அங்குலம் :————.
9. தேசிய இனம் :————.
10. அருகாமையில் உள்ள பொலிசு நிலையம் :————.
11. அருகாமையில் உள்ள தபால்/தந்தி நிலையம் :————.
12. தரைப்படை (யுத்தகால சேவையுட்பட) கடற்படை, ஆகா யப்படை, தொண்டர்படை ஆகிய பிரிவுகளில் சேவை செய்து இருப்பின் அவற்றின் பிரிவு, தகுதிகள் ஆகிய வற்றை முழுவிபரங்களுடன் குறிப்பிடுக :————.
13. வைத்தியப்பரிசோதனையில் நீர் ஸ்ரீ லங்கா தரைப்படை, ஸ்ரீ லங்கா கடற்படை அல்லது ஸ்ரீ லங்கா ஆகாயப்படை ஆகியவற்றில் ஒன்றில் சேவை செய்வதற்கு தகுதியற்ற வர் எனத்தள்ளுபடி செய்யப்பட்டதுண்டா ? :————.
14. இராணுவத்தில் இருந்து திரும்பிய/விலகியபோது உமது நடத்தை (திரும்பிய/விலகியபோது வழங்கப்பட்ட சான் றிதழின் பிரதி இணைத்தல் வேண்டும்) :————.
15. வேறும் எவ்விதமான தகுதிகள் இருப்பின் (விளையாட்டுக் கள் சம்பந்தப்பட்டவை) :————.
16. 8 ம் பந்தி (ஈ) (4) ம் பிரிவின்படி நற்சான்றுப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் தகுதிகளும் :——
    1.
    2.
    3.
17. விண்ணப்பகாரர் கையொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண் டிய உறுதி :—

மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு என்னால் கொடுக்கப்பட்ட விடைகளும் தகுதிகளும் எனது அறிவிற்கெட்டியவரை சரி யானவை என்றும் ஏற்றுக்கொள்ளும்படியும் இத்தால் உறுதி கூறுகின்றேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

3-313—09.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 50.

---

**இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் திணைக்களம்**

**ஆய்வு உத்தியோகத்தர் பதவிகள்**

இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் திணைக்களத்தில் இரண்டு ஆய்வு உத்தியோகத்தர் பதவிகளுக்கான விண்ணப்பங் கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி படி வத்திற்கேற்ப தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 1973 மாச்சு, 31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இறக்கு மதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர், த.பெ. 559, இல. 54, சதாம் வீதி, கொழும்பு 1 ல் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். உறையின் இடதுபக்க மேல் மூலையில் " ஆய்வு உத்தி யோகத்தர் பதவிகள் " எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**2. சம்பள அளவுத் திட்டம்**

இப்பதவிகளுக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் வரு டாந்தம் ரூபா 6,600—8 × 180 உம் 5 × 240—ரூபா 9,240 உம் ஆகும். வருடாந்தம் ரூபா 7,000, ரூபா 8,040 பெறுமுன் வினைத் திறமை காண் தடைகளுண்டு. (1.10.69 ற்கு முன்னிருந்த ஒத்தி சைவான சம்பள அளவுத்திட்டம் வருடாந்தம் ரூபா 3,900—8 × 180 உம் 5X240— ரூபா 6,540 உம் ஆகும். வருடாந்தம் ரூபா 4,800, ரூபா 5,340 பெறுமுன் வினைத்திறமைகாண் தடைகளிருந்தன.)

**3. நியமன நியதிகள்**

பதவிகள் நிரந்தரமானவை. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் கள், ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் ஓய்வூதியப் பதவிகளை வகிக் காதவராயிருந்தால் அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்திற்குப் பணஞ் செலுத்த வேண்டியவராயிருப்பர். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் நியமனத் திகதியின் போது அரசாங்க சேவையில் அல்லது உள்ளூர் அரசாங்க சேவையில் ஓய்வூதிய பதவியை வகிப்பவராயிருந்தால் அவர் ஓய்வூதிய நிலைமையைத் தொடர்ந்து அனுபவிப்பார். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் ஏற்கனவே அரசாங்க சேவையிலிருந்தால், முதன் முதலில் 3 வருட காலத் திற்குத் தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவார். அரசாங்க சேவை யிலுள்ள நிரந்தர ஓய்வூதிய உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட் டால் அவரது நியமனம் ஒருவருட காலத்திற்குப் பதிற் கடமை யாற்றுவதாயிருக்கும்.

**4. தகைமைகள்**

ஒவ்வொரு அபேட்சகரும் பின்வருவனவற்றிற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) சிறந்த நற்குணமும் தேகாரோக்கியமுடையவரெனவும் ;

(ஆ) 73 மாச்சு, 31 ஆந் திகதியின்போது 21 வயதிற்குக் குறை யாதவரெனவும் 35 வயதிற்கு மேற்படாதவரெனவும் (ஏற் கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வய தெல்லை அமையாது) ;

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவ ரெனவும், அல்லது

(ii) பொது எழுதுவினைஞர் சேவையின் I ஆம் வகுப்பு அல்லது II ஆம் வகுப்பு அ பகுதியில் 10 வருட சேவை யுடன் கூடிய உத்தியோகத்தராகவிருப்பதுடன் வருடாந் தம் ரூபா 5,304 க்குக் குறையாத சம்பளம் பெறுபவ ரெனவும், அல்லது

(iii) வேறெந்த அரசாங்கத் திணைக்களத்திலும் 10 வருட சேவைக்குக் குறையாத ஆய்வு உத்தியோகத்தராகவிருப் பதுடன் வருடாந்தம் ரூபா 5,304 க்குக் குறையாத சம் பளத்தைப் பெறுபவரெனவும்,

(ஈ) குறைந்தது க.பொ.த.ப. (சாதாரண தரப்) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றவரெனவும் நிரு பித்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரு வனவற்றின் பிரதிகளை இணைத்தல் வேண்டும் :—

(அ) மேலுள்ள 4(இ) பந்தியில் கூறப்பட்டுள்ள பட்டதாரிச் சான்றிதழ்.

(ஆ) ஆங்கிலப் பாஷையிலுள்ள அறிவுத் தரத்தைக் காட்டும் கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு.கு.—உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்திற்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங் கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஈ) அண்மையில் பெற்ற குணச் சான்றிதழ்கள் இரண்டு (ஏற் கனவே அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்க ளின் விடயத்தில் இது தேவையில்லை).

குறிப்பு.—அபேட்சகர்களுக்குச் சான்றிதழ்களின் பிரதிகள் கொடுக்கப்படமாட்டாது. **மூலப் பிரதிகள் அனுப்பப்படக்கூடாது.**

6. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், இவ்வர்த்தமானியின் பகுதி I பிரிவு (II அ) வில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்குரிய் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்கள்.

என். டபிள்யு. எச். டி. குணரட்ன,
இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர்.

இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் திணைக்களம்,
த.பெ. 559,
54, சதாம் வீதி,
கொழும்பு 1,
1973 பெப்ரவரி.

### விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம்

#### ஆய்வு உத்தியோகத்தர் பதவிகள்

#### இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் திணைக்களம்

1. முழுப் பெயர் (தடித்த எழுத்துக்களில்) :————.

2. அஞ்சல் முகவரி :—
   (i) சொந்த :————.
   (ii) அலுவலக :————.

3. பிறந்த திகதி :————.
   1973 மாச்சு, 31 ஆந் திகதி வயது :————.

4. தேசிய இனம் :—.
   (அ) பரம்பரையாக வந்த இலங்கையரா அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கையரா :————.

5. கல்வித் தகைமைகள் (ஆங்கிலப் பாஷையில் உள்ள தகைமைகள் உட்பட) :—
   1.
   2.
   3.
   (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

6. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ?:————.

7. ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவரென்றால் குறிப்பிடவும் :—
   (i) வகித்த நியமனங்களின் திகதிகளும் தன்மையும் : ————.
   (ii) (பொது எழுதுவினைஞர் சேவையிலிருப்பவரென்றால் II ஆம் வகுப்பு அ பகுதிக்கும், I ஆம் வகுப்பிற்கும் அல்லது II ஆம் வகுப்பு அ பகுதிக்கு அல்லது I ஆம் வகுப்பு முதலியவற்றிற்கு உயர்த்தப்பட்ட திகதிகளைக் குறிப்பிடவும்.)
   (iii) 1973 மாச்சு, 31 ஆந் திகதி வருடாந்த சம்பளம் : ————.

8. விசேடக் கோரிக்கைகள், விசேடத் தகைமைகள், அனுபவம் முதலியவற்றின் விபரங்கள் :————.

9. பின்வருவனவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன :—
   (அ) எனது கல்விச் சான்றிதழ்கள் (விளம்பரத்தின் பந்தி 5(அ), (ஆ) வைப் பார்க்கவும்)
   (ஆ) எனது பிறப்புச் சாட்சிப் பத்திரம்.
   (இ) எனது குணத்தைக் காட்டும் அண்மையில் பெற்ற இரண்டு நற்சான்றிதழ்கள்.

இவ்விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் இத்தால் நான் உறுதிப்படுத்துகிறேன். அத்துடன் இதில் காணப்படும் விவரங்களில் எதுவும் பொய்யானதென்றோ தவறானதென்றோ தேர்வுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமை நீக்கஞ் செய்யப்படப் பாத்திரவாளியாவேன் என்பதையும் நியமனத்துக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலையினின்றும் நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

* நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் இலங்கைப் பிரஜையென்றதற்கான பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பிப்பேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

*பரம்பரையாக வந்த இலங்கையரென்றால் வெட்டி விடவும்.

3-387 —09.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 50.

---

### சௌக்கிய அமைச்சு

#### திட்டமிடல் ஆலோசகர் பதவி (நிதி)

சௌக்கிய அமைச்சில் திட்டமிடல் ஆலோசகர் (நிதி) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளதைப் போன்ற படிவத்தில் நிரப்பப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 1973 மார்ச் 20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், சௌக்கிய அமைச்சு, தபாற்பெட்டி 500, கொழும்பு 1 என்ற விலாசத்துக்கு வந்து சேர வேண்டும்.

குறிப்பு.—(i) கீழே கொடுக்கப்பட்டுள்ளதைப் போன்ற படிவத்தில் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அன்றேல் தாமதமாகிவிட்டது என்ற குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களை அனுப்புவதற்குக் கடைசி நாட்கள் வரை தாமதிக்கும் அபேட்சகர்கள் அதனாலேற்படும் இன்னல்களுக்குத் தாமே பொறுப்பாளராவர்.

2. நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்

(i) பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றிச் சம்பளம் அற்றதுமாகும். தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர் 'அரசாங்க சேவைச் சகாயநிதிக்கு உதவுதொகை செலுத்துமாறு வேண்டப்படுவார்.

குறிப்பு.—31.12.71 ஆந் திகதிக்கு முன்னர் இளைப்பாற்றிச் சம்பள உரிமையுள்ள பதவியை' வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து, அவருக்கென்றுள்ள இளைப்பாற்றிச் சம்பள அந்தஸ்தைத் தொடர்ந்து வைத்துக்கொள்ள அவர் அனுமதிக்கப்படுவார்.

(ii) நியமனம் ஒரு வருட காலத்துக்கு ஒரு பதில் அடிப்படையில் இருக்கும். தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர் பதிற் சேவைக் காலத்தில் எந்நேரத்திலாவது அன்றேல் அச் சேவைக் காலத்தின் முடிவில் அவ்வாறு நிலையான பதவிக்கு மாற்றப்படக்கூடும்.

3. திரட்டிய சம்பள அளவுத்திட்டம்

முதல் வருடச் சம்பளம் ரூபா 17,040. இதில் வருடம் 600 ரூபா வீதம் நான்கு வருடாந்தச் சம்பள ஏற்றங்கள் அளிக்கப்பட்ட பின்னர் இறுதி வருடாந்தச் சம்பளம் 19,440 வரை அதிகரிக்கும்.

(இதன் இணை எதிரான அடிப்படைச் சம்பள அளவுத் திட்டம் 1.10.1969 ஆந் திகதிக்கு முன்னர் வருடமொன்றுக்கு ரூபா 13,800—600 வீதமான 4 சம்பள ஏற்றங்களுடன்—16,200 வரை செல்வதாக இருந்தது.

4. வயதெல்லை

ஒவ்வொரு விண்ணப்பகாரரும் 1973, மார்ச் 20 ஆந் திகதியன்று 35 வயதுக்குக் குறையாதவராகவும், 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்,

5. கல்வித் தகைமைகளும், பிறதகைமைகளும்.—ஒவ்வொரு விண்ணப்பகாரரும்—

(அ) (i) இலங்கையின் அல்லது பெரிய பிரித்தானியாவின் தத்துவம் பெற்ற கணக்காளர் நிறுவனத்தினது ஒரு உறுப்பினராக ; அன்றேல்

(ii) இலங்கையின் அல்லது பெரிய பிரித்தானியாவின் செலவு, முகாமை நிறுவனத்தினது ஒரு உறுப்பினராக ; அன்றேல்

(iii) செலவு, முகாமைக் கணக்கியல் அனுபவத்துடன் அரசாங்கக் கணக்காளர்கள் சேவையில் உள்ள II ஆம் வகுப்புக் கணக்காளராக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ஆ) நிறைவேற்றும் பதவியொன்றில் 10 வருடங்கள் கணக்கனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—(i) அபேட்சகருக்கு அரசகரும மொழியில் உள்ள அறிவு விசேட கவனிப்புக்கு உரியதாகும்.

(ii) திட்டமிடும் வேலையிலும், சௌக்கிய நிதி நிருவாகத்திலும் அறிவும், அனுபவமும் உள்ள அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

6. ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் சாதனங்களைக் கேட்கும் நேரத்தில் அனுப்புமாறு கோரப்படுவர் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (கவனிக்க.—ஞானஸ்நானச் சான்றிதழ் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கத்துக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ் கொள்ளப்படமாட்டாது).

(ஆ) பட்டச் சான்றிதழ் அல்லது கல்விச் சான்றிதழ்.

(இ) இரண்டு நற்குணச் சான்றிதழ்கள். இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமைச் சான்றிதழ் அல்லது தொழிநுட்பத் தகைமைச் சான்றிதழ் அன்றேல் அவை இரண்டும்.

(உ) சிங்களத்தில் சித்தியடைந்த மிகவுயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) சாதனங்களோ, சாதனங்களின் படிகளோ விண்ணப்பத்துடன் இணைக்கப்படக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

7. விண்ணப்பங்களையும், அவை சம்பந்தமான வேறு எந்தக் கடிதத் தொடர்புகளையும் செயலாளர், சௌக்கிய அமைச்சு என விலாசமிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I தொகுதி (II அ) இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

டபிள்யூ. ஏ. எல். விஜயபால,
சிரேட்ட உதவிச் செயலாளர்,
சௌக்கிய அமைச்சின் செயலாளருக்காக.

சௌக்கிய அமைச்சு,
தபாற்பெட்டி 500,
காலி முகச் செயலகம் (கால்பேஸ் செக்கிரட்டேரியட்),
கொழும்பு 1, 1973 பெப்ரவரி 28 ந் திகதி.

மாதிரிப் படிவம்

திட்டமிடல் ஆலோசகர் (நிதி) பதவி—சௌக்கிய அமைச்சு

1. முழுப் பெயர் :————.
   (அ) குடும்பப் பெயர் :————.
   (ஆ) பிறபெயர்கள் முழுவதும் :————.
2. விலாசம்—(அ) அலுவலகம் :————.
   (ஆ) வசிப்பிடம் :————.
3. (அ) 1973 மார்ச் 20 ஆந் திகதியன்று வயது :————.
   (ஆ) பிறந்த திகதி :————.
4. கல்வித் தகைமைகள் :————.
5. உயர் தொழிற்றகைமைகளும் அவற்றைப் பெற்ற திகதிகளும்:—
6. தற்போதைய நிலை :————.
7. விண்ணப்பக்காரர் அரசாங்கக் கணக்காளர் சேவையில் உள்ளவராயின், வகுப்பையும் அதில் சேர்ந்த திகதியையும் குறிப்பிடுக :————.
8. சிங்களத்தில் தேர்ச்சி (கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையைக் குறிப்பிடுக :————.
9. கவனிக்கப்படுவதற்கான விசேட உரிமைக் கோரிக்கைகள் (அறிவித்தலின் 5 ஆம் பந்தியின் குறிப்பு ii ஐப் பார்க்க).
————.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :————.

(விண்ணப்பகாரர் அரசாங்கக் கணக்காளர்கள் சேவையில் உள்ளவராயின், திணைக்களத் தலைவரால் உபயோகிப்பதற்கு)

3, 6, 7, 8 ஆம் கூடுகளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் சரியானவை.

————
(திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப் பெயரும்.)

திகதி :————.

3-406—09.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 50

---

மாத்தறை மாவட்டத்தில் (தெவுந்தறை)ப் பிரிவிற்கு பிறப்பு, இறப்பு வல்லபொடைப்பற்றுக்கும் நாலுகடவத்தைக்கும் பொதுப் பதிவாளர் பதவி

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப்படும். பெற்றுக் கொண்டமைக்கான அறிவித்தல் கடைசித் திகதியிலிருந்து மூன்று வாரத்திற்குள் பெறுதவர்கள் உடனடியாக, பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டமைச்சின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தை கவனிக்கும்படி கேட்கும் உரிமை ஏதும் உடையராகார்.

செயலாளர்,
பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டமைச்சு.

பொதுநிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு-7.
பெப்ருவரி 20, 1973

3-373—09.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 50

---

## ஆயுள்வேத திணைக்களம்

### மருந்தக மேற்பார்வையாளர், மருந்தக விரிவுரையாளர் பதவி

ஆயுள்வேத திணைக்களத்திலுள்ள மருந்தக மேற்பார்வையாளர், மருந்தக விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவத்தில் குறிப்பிட்டபடி எழுதப்பெற்று செயலாளர், சுகாதார அமைச்சு, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் 30.3.1973

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 7.4.1973

குறிப்பு :—(i) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகி விட்டது எனக் கூறும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்பட மாட்டாது. விண்ணப்பம் அனுப்புவதற்கு கடைசித் திகதிவரையும் தாமதித்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(ii) வெளிநாட்டு விண்ணப்பதாரர் தாங்கள் விரும்பின் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை சுகாதார அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பி வைக்கலாம்.

(iii) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கையரான உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாக இருக்கிறார்களா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—

(i) இப்பதவி நிரந்தரமானது. அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவி தொகை செலுத்தப்படல் வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படுபவர் சொந்த மருத்துவத் தொழிலாற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

3. சம்பளமும் படிகளும் :—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள விகிதம் பின்வருமாறு :—

ரூபா 9,600—360X4 உம் 480X5—ரூபா 13,440 வருடாந்தம். வருடம் ரூபா 11,520 பெறுமுன்னர் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையிற் சித்தியடைதல் வேண்டும். (வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை ஆயுள்வேத மருந்தகம் பற்றி சிப்பார்சு செய்யப் படும் பாடங்களுள் ஒன்று பற்றிய ஆய்வுக் கட்டுரை)

4. தகைமைகள் :—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் அவர்/அவர் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதை திருப்திப்படுத்த சான்று காட்டவேண்டும்.

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமுடையவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) 9.3.1973 ல் 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதிக்கு மேற்படாதவராயுமிருக்க வேண்டும். (வயதுக் கட்டுப்பாட்டு மேலெல்லை ஏற்கனவே அரசசேவையில் உள்ளவர்க்குத் தேவையில்லை)

(இ) (i) ஏதாவதொரு அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேதக் கல்லூரியில் "டிப்ளோமா" பட்டம் கௌரவம், முதலாம் வகுப்பு பெற்றவராக இருக்க வேண்டும்.

(ii) பட்டதாரியானபின் மருந்தாக்கவியலில் மேலதிகப் பட்டம் பெற்றவராயிருக்க வேண்டும் அல்லது

ஔடத செய்முறையில் ஆய்வு/ பலவிசேட தகைமை பெற்ற கட்டுரைகள் எழுதி பிரபல்யம் அடைந்தவராயிருத்தல் வேண்டும்.

(iii) பெருமளவில் ஆயுள்வேத மருந்து தயாரிப்பதில் குறைந்தது 5 வருட தேர்ச்சியுள்ளவராயிருக்க வேண்டும்.

குறிப்பு : பின் குறிப்பிடும் தகைமையுள்ளவர்களும் மேலுள்ள பந்தி "இ" யில் குறிப்பிட்டுள்ள தகைமைகள் இல்லாதிருப்பின் இப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம். மேற் கூறிய தகைமையுள்ளவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து இவ்விண்ணப்பங்கள் கவனிக்கப்படும்.

(i) ஒரு உத்தியோகத்தர் அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேதக் கல்லூரி ஒன்றில் டிப்ளோமாப் படம்பெற்ற பட்டதாரியாக மருந்து செய்முறை வைத்தியத்தில் 5 வருடத்துக்குக் குறையாத தேர்ச்சியுடையவராயிருத்தல் வேண்டும்.

(ii) செயலக மேற்பார்வைத் தேர்ச்சி மேலதிக தகைமையெனக் கருதப்படும்.

5. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு.—சமைய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைக்குரிய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு. இவற்றின் ஒன்று பணிப்பாளர், கல்லூரி விரிவுரையாளர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) தொழிற்றகைமையுடன்/அல்லது தொழில் நுட்பத்தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்கட்கூடாக அனுப்புதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அது தொடர்பான வேறு கடிதங்களையும் செயலாளர் சுகாதார அமைச்சு என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமன்றி வேறு இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் சொந்தப் பெயருக்கு அனுப்பக் கூடாது.

8. இது சம்பந்தமானவற்றை அரசாங்க சேவை பதவிகட்கான நியமனங்கட்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம் (II அ) ம் பிரிவில் வெளியிடப்பட்டுள. அவற்றைப் பார்க்குக.

ஸி. ஈ. எஸ். வீரதுங்க,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார் அமைச்சு,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
20.2.1973.

இலக்கம் :....................

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

சுகாதார அமைச்சு

விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பப் பதவி .......................................... பதவி

.......................................... இலாகா.

2. முழுப்பெயர் :————.
(தடித்த எழுத்தில்)

3. தபால் முகவரி :————.
(முகவரி மாற்றப்படின் உடனடியாக அறிவிக்கவும்)

4. பிறந்த திகதி :————.
ஆண்டு ————. மாதம் ————. திகதி ————.

5. உள்ளூர் விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியன்று சரியான வயது :————.
வருடங்கள் ————. மாதங்கள் ————. நாட்கள் ————

6. நீர் இலங்கைப் பிரசையா? பரம்பரை காரணமாகவா பதிவு காரணமாகவா என்பதைக் குறிப்பிடவும் :————.
((1) இலக்கக் குறிப்பைப் பார்க்கவும்)

7. பிறந்த இடம்—(2 ஆம் இலக்கக் குறிப்பைப் பார்க்கவும்)
(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) தகப்பன் :————.
(இ) தகப்பன் வழிப்பாட்டன் :————.
(ஈ) தகப்பன் வழிப்பூட்டன் :————.

8. (அ) பால் :————.
(ஆ) திருமணமானவர், தனியானவர், தாரமிழந்தவர் :————.

9. பின்வருவனவற்றில் சித்திபெற்ற உயர் பரீட்சைகள் :————.
(1) சிங்களம் (2) தமிழ் (3) ஆங்கிலம்
(1) :————.
(2) :————.
(3) :————.

10. 12 வயது தொடக்கம் சென்ற பாடசாலைகள், கல்லூரிகள், பிற தாபனங்கள் ஆகியவை :————.

| பொதுக் கல்வி | | | தொழிற் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| 1. | | | 1. | | |
| 2. | | | 2. | | |
| 3. | | | 3. | | |
| 4. | | | 4. | | |
| 5. | | | 5. | | |

11. விளையாட்டுகளில் பெற்ற சிறப்புகளும் இத்துறையில் வகித்த பொறுப்பான பதவிகளும் :————.

12. (அ) நீர் பணமுட்டு எதுவும் இல்லாதவரா? அவ்வாறு இல்லையாயின் எவ்வளவுக்கு? :————.

(ஆ) நீதிமன்றமொன்றில் குற்றவியற் குற்றமெதுக்கும் நீர் குற்றஞ்சாட்டப்பட்டவரா? அவ்வாறுயின் திகதிகள், வழக்கு இலக்கம் ஆகியவற்றேடு முழு விபரங்களையும் தருக :————.

13. உயர் கல்வி, உயர்தொழில், தொழில்நுட்பத் தகைமைகள் :————.

(பட்டங்கள், சிறப்புகள், உயர்தொழில் அல்லது தொழில்நுட்ப அல்லது இரண்டினதும் தகைமைகளைத் திகதி, வகுப்பில் சித்திபெற்றிருப்பின் அதனையும் பாடங்கள், நிலையங்களின் பெயர்கள் ஆகிய விபரங்களோடு தருக)

14. தற்போதைய தொழிலும், முன்னர் செய்த தொழில் எதுவுமிருப்பின் அவற்றையும் (தொழில் சேர்ந்த, விலகிய திகதிகளும் பெற்ற ஆண்டுச் சம்பளமும் கொடுக்கப்படல் வேண்டும்)

| பதவி | தொடக்கம் | வரை | ஆண்டுச் சம்பளம் ரூபா |
|---|---|---|---|
| (1) | | | |
| (2) | | | |
| (3) | | | |
| (4) | | | |
| (5) | | | |
| (6) | | | |
| (7) | | | |
| (8) | | | |

(முக்கியம்.—அரசாங்கத் தொழிலை விட்டு விலகிய காரணத்தை இதன்கீழுள்ள 16 ஆம் கூண்டில் குறிப்பிடவும்).

15. சிறப்புத் தகைமைகள் :————.
(அறிவித்தலிலுள்ள சிறப்புத் தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இரண்டுமுடையவரா? அவ்வாறு உடையவராயின் அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புத் தேவைகளைப் பார்க்க)

16. மேலும் விபரங்கள் எதுவுமிருப்பின் :————.

17. இந்த விண்ணப்பத்தில் என்னுல் அளிக்கப்பட்டுள்ள விவரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் இத்தால் உறுதி செய்கின்றேன். இதன் கண் உள்ள விபரங்கள் எவையுந் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிவுக்கு முன்னர் கண்டு பிடிக்கப்படுமிடத்து தகைமை நீக்கஞ் செய்யப்படுவதற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து நட்ட ஈடெதுவுமின்றி வேலை நீக்கஞ் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதனை யான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

குறிப்புகள்—(1) பதிவுகாரணமாக இலங்கைக் குடியானவராயின் தொடர் எண்ணையும் குடியுரிமைச் சான்றிதழின் திகதியையும் குறிப்பிடுக.

(2) விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் (ஆ) அல்லது (இ), (ஈ) ஆகிய இரண்டும் நிரப்பப்படல் வேண்டும். அவர் இலங்கையில் பிறக்காதவராயின் (அ) வைவிட (ஆ) அல்லது (இ), (ஈ) நிரப்பப்படல் வேண்டும்.

அபேட்சகர் அரசாங்க சேவையிலுள்ளவராயின் திணைக்களத் தலைவரின் அறிக்கை :—

திணைக்களத் தலைவரின்
பெயரும், பதவிப்பெயரும்.

திகதி :————.

3-367—09.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 50

---

✓

**தேசிய தொழிற்பயிற்சிச் சபை**

தேசிய தொழிற்பயிற்சிச் சட்டத்தின்கீழ் பயிலுநர்களின் ஆட்சேர்ப்பு

ஸ்ரீலங்கா குடியரசின் 9.2.73 ஆந் திகதி 46 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பத்தின் முடிவுத் தேதி 15 மார்த்து 1973 வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

தேசிய தொழிற்பயிற்சிச் சபை,
இல. 30, விஜயராம மாவத்தை, கொழும்பு 7,
1973 ம் ஆடு பெப்புருவரி மீ 26 ந் வ.

டி. ஆர். எல். பாலசூரியா,
தொழிற் பயிற்சிப் பணிப்பாளர்.

3-441—09.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 50

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்குமான வினைத்திறமைகாண் தடை, இரண்டாம் மொழிப்பரீட்சைகள்—ஏப்பிறல் 1973**

இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கும் மற்ற அரச உத்தியோகத்தர்களுக்குமான வினைத்திறமைகாண் தடை, இரண்டாம் மொழிப் பரீட்சைகள் பின்வரும் தேதிகளில் கொழும்பில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது :—

1973, ஏப்பிரில் 23—சட்டம் (இ.நி.சே. உத்தியோகத்தர்க்கான முதலாம் வினைத்திறமைகாண் தடை) 3 மணி

1973, ஏப்பிரில் 24—சட்டம் (இ.நி.சே. உத்தியோகத்தர்க்கான இரண்டாம் வினைத்திறமைகாண் தடை) .. .. 3 மணி

1973, ஏப்பிரில் 24—சட்டம் (ஏனைய உத்தியோகத்தர்களுக்கு) 3 மணி

1973, ஏப்பிரில் 25—நிதி/கணக்கியல் (முதல் வினைத்திறமைகாண் தடை)/ கணக்கியல் (இரண்டாம் வினைத் திறமைகாண் தடை) .. 2½ மணி

1973, ஏப்பிரில் 25—நிருவாகம்/தாபனக் கோவையும் .. 3 மணி

1973, ஏப்பிரில் 26—பொருளியல்/சமூகவியல் .. 3 மணி

1973, ஏப்பிரில் 26—சிங்களம் (எழுத்து)/தமிழ் (எழுத்து)/ ஆங்கிலம் (எழுத்து) .. 2 மணி
(அரசகரும மொழிக் கொள்கை நோக்கிற்காகப் "புதிதாகச் சேர்ந்தோர்" எனக் கருதப்படும் இ.நி.சே. உத்தியோகத்தர்களுக்கான சிங்கள வினுத்தாள்கள் 3 மணி நேரங் கொண்டவையாக இருக்கும்)

1973, ஏப்பிரில் 30—சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் (வாய் மொழிப்) பரீட்சைகள், இத்தினத்தில் ஆரம்பமாகும்

(இந்நேரசூசிகை மாற்றத்துக்குள்ளாகக் கூடியது)

*"அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகளும் கருமமுறைக் கைந்நூலும்" என்று முன்பு தலைப்பிடப்பட்ட வினுத்தாள் "அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகளும் தாபனச் சேவையும்" என இப்பொழுது

தலைப்பிடப்பட்டுள்ளதைப் பரீட்சார்த்திகள் கவனிக்குமாறு வேண்டப்படுகிறார்கள். இப்பாட நோக்கத்திற்காக, அவர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகளினதும் தாபனக் கோவையின் பின்வரும் அதிகாரங்களினதும் அறிவை உடையவர்களாக இருக்க வேண்டப்படுகிறார்கள் :—

அதிகாரங்கள் : II, III, V, VI, VII, IX, XVI, XXI, XXIV, XXIX, XXX, XXXIII, XXXV, XXXVI, XXXVIII, XXXIX, XL, XLI, XLIII, XLIV, XLVII, XLVIII தாபனக் கோவையின் அதிகாரங்கள், XLVII, XLVIII இன்னும் அச்சிடப்படாததினால் இவ்விரு அதிகாரங்களினதும் கையெழுத்துப் பிரதிகளை சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 7 இல உள்ள அரசாங்க நிருவாகத் திணைக்களத்தின் தாபனப் பணிப்பாளருக்கு விண்ணப்பித்தலின் மூலம் பெறலாம்.

2. இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமை காண் தடைப்பரீட்சைகள் பின்வரும் பாடங்களை உள்ளடக்கியதாகவிருக்கும் :—

(அ) முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை—(புதிய பாடத் திட்டம்)

(i) சட்டம்.
(ii) நிதி.
(iii) நிருவாகம்.
(iv) பொருளியல்† அல்லது சமூகவியல்.†

†(உத்தியோகத்தர்கள் பொருளியல், சமூகவியல் என்ற இரண்டில் ஒன்றுக்குத் தோற்றலாம்).

குறிப்பு.—(i) 30.9.71 இல் சேவையிலிருந்து இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்கள், மேலே (அ) வில் உள்ள முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையை அல்லது கீழே (ஆ) வில் உள்ள முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையை எடுக்கும் விருப்புரிமை உடையவர்களாவர்.

(ii) இப்பரீட்சைக்குரிய பாடத் திட்டங்களும் மற்றும் ஏற்பாடுகளும் 1972, பெப்புருவரி 9 ஆந் தேதிய 14,996/12 ஆம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1972, பெப்புருவரி 9 ஆந் தேதிய இலங்கை நிருவாக சேவை பற்றிய பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு "ச" வில் இலங்கை அரசியலமைப்பின் பிரிவு (அ) வின் "சட்ட"ப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கை அரசியலமைப்புச் சேர்த்துக் கொள்ளப்படுதல், "நிருவாக" திற்கான பாடத் திட்டத்தின் பிரிவு (ஆ) வில் கரும முறைக் கைந்நூலிற்காகத் தாபனக் கோவை பதிலீடு செய்யப்படுதல் என்பவற்றிற்கமைய குறிப்பிடப்பட்டுள்ளது. "நிருவாகம்" என்ற வினாத்தாளின் நோக்கத்திற்கான தாபனக் கோவையின் பொருத்தமான அதிகாரங்கள் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை.—(பழைய பாடத் திட்டம்)

(i) சட்டம்.
(ii) கணக்கியல்.
(iii) தாபனக்கோவை.

குறிப்பு.—(i) 30.9.71 இல் சேவையிலிருந்த இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களில், மேலே (அ) வில் உள்ள முதலாம் வினைத்திறமைகாண தடைப் பரீட்சைக்குத் தோற்ற விருப்புத் தெரிவிக்காதவர்கள் மட்டுமே இப் பரீட்சைக்குத் தோற்றலாம்.

(ii) 1963, யூலை 10 ஆந் தேதிய திறைசேரி அறிவித்தலில் குறிக்கப்பட்டு, 1963, யூலை 12 இன் 13,697 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேஷ வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த அப்போதைய V ஆம் வகுப்பு I ஆந் தர உத்தியோகத்தர்களாக விருந்து, பின்னர் அப்போதைய IV ஆம் வகுப்பிற் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை தொடர்பினவானவை போன்று இலங்கை அரசியலமைப்பின் பிரிவு (III) இன "சட்ட"ப் பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கை அரசியலமைப்பு சேர்த்துக் கொள்ளப்படுதல், அரசாங்க சேவை ஆணைக்குழுவிதிகளும் கருமமுறைக் கைந்நூலுக்காகத் தாபனக் கோவை பதிலீடு செய்யப்படுதல் என்பவற்றிற்கமைய இப்பரீட்சைக்குரிய பாடத் திட்டங்களும் ஏனைய ஏற்பாடுகளும் அமையும்.

தாபனக் கோவையின் பொருத்தமான அதிகாரங்களாவன அறிவித்தலின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளனவையே.

(இ) 30.9 71 இல் சேவையிலிருந்த இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாம் மொழி உட்பட்ட இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும், 1.10.71 இல் அல்லது அதன் பின்னர் சேவைக்கு நியமிக்கப்பட்ட இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாம் மொழிப் பரீட்சையும்.

(i) சட்டம்.
(ii) கணக்கியல்.
(iii) சிங்களம்.
(iv) தமிழ்/ஆங்கிலம்*.

*அரசகரும மொழிக் கொள்கை நோக்கிற்காகப் "புதிதாகச் சேர்ந்தோர்" எனக் கருதப்படும், சிங்கள மொழி மூலம் சேவையிற் சேர்வதற்குத் தகைமை பெற்ற உத்தியோகத்தர்கள் தமிழ்ப் பாடத்திற்குப் பதிலாக ஆங்கிலப் பாடத்திற்குத் தோற்றலாம்.

குறிப்பு.—(i) 1963, யூலை 10 ஆந் தேதிய திறைசேரி அறிவித்தலில் குறிக்கப்பட்டு, 1963, யூலை 12 இன் 13,697 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேஷ வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தது, 1967, டிசெம்பர் 22 ஆந் தேதிய, 14,780 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 1967, டிசெம்பர் 10 ஆந் தேதிய திறைசேரி அறிவித்தலினால் திருத்தப்பட்டவாறான அப்போதைய V ஆம் வகுப்பு I ஆந் தர உத்தியோகத்தர்களாக விருந்து, பின்னர் அப்போதைய IV ஆம் வகுப்பிற் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை தொடர்பினதானவை போன்று, இப்பரீட்சைக்குரிய சட்டம், கணக்கியல், சிங்களம், தமிழ், ஆகிய பாடங்கள் சம்பந்தமான பாடத்திட்டங்களும் ஏனைய ஏற்பாடுகளும் அமையும்.

(ii) அப்போதைய இலங்கை குடிசார் சேவைக்கும், 24.9.56 இல் அல்லது அதன் பின்னர் இலங்கை நிருவாக சேவைக்கும் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான சிங்களப் பரீட்சை சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர தரமுடையதாகவும் இரண்டு வினாத் தாள்களைக் கொண்டதாகவுமிருக்கும், அவையாவன :—

(அ) பாஷையும் கட்டுரையும் .. .. 3 மணி
(ஆ) மொழிபெயர்ப்பு .. .. 3 மணி

1963, யூலை 12 இன் 13,697 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேஷ வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1963 யூலை 10 ஆந் தேதிய திறைசேரி அறிவித்தலில், ஏனைய இ.நி.சே. உத்தியோகத்தர்களுக்கான சிங்களப் பரீட்சையின் பாடத்திட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது. போதிய தரமுடையதெனக் கருதப்படும் சிங்களப் பரீட்சையொன்றில் ஏற்கெனவே சித்தியடைந்துள்ள உத்தியோகத்தர்கள், சிங்களப் பரீட்சையொன்றில் சித்தியடைய வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள்.

(iii) ஆங்கிலப் பரீட்சை கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர தரமுடையதாகும். அதன் பாடத்திட்டம் 1972, யூன் 10 இன் 85 ஆம் இலக்க இணைந்த சேவைகளின் சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடத்தில் சித்தியொன்றிற்காக எழுத்து, வாய்மொழிமூல ஒவ்வொரு பிரிவிலும் 33⅓ சத வீதத்தைப் பரீட்சார்த்திகள் பெற வேண்டியவர்களாவர்.

போதிய தரமுடைய ஆங்கிலப் பரீட்சையொன்றில் ஏற்கெனவே சித்தியடைந்துள்ள உத்தியோகத்தர்கள், ஆங்கிலப் பரீட்சையொன்றில் சித்தியடைய வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள்.

3. கடல்கடந்த சேவை தகுதிகாண் நிலையினர், பொலிசுப்படை, மதுவரித் திணைக்களம், சிறைச்சாலைத் திணைக்களம், காட்டுத் திணைக்களம், மிருகக் காட்சிச்சாலைத் திணைக்களம், இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம், குடிசார் விமானப் போக்குவரத்துத் திணைக்களம், விலைமதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான பரீட்சையும், முன்னைய அரசாங்க வேலைத் திணைக்களம், அளவைத் திணைக்களம், அஞ்சல், தொலைச்செய்திப் போக்குவரத்துத் திணைக்களம், கமத்தொழில் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், புகையிரதத் திணைக்களம், துறைமுக எந்திரவியலாளர் திணைக்களம், கொழும்புத் துறைமுக ஆணைக்குழு, முன்னைய அரசாங்க மின்வேலைகள் பொறுப்பேற்புத் திணைக்களம், சமூக சேவைகள் திணைக்களம், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், வர்த்தகத் திணைக்களம், முன்னைய கைத்தொழில் திணைக்களம், தொழிற்றிணைக்கள உத்தியோகத்தர்களுக்கும்வெடிமருந்து பரிசோதனையாளர்களுக்குமான மொழியில், வாய்மொழிப் பரீட்சையும் ஒரே நேரத்திலும், இடத்திலும் நடாத்தப்படும்.

4. மேலே திரும்பவும் தரப்படும், 1966.09.04 ஆந் தேதிய, 701 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் 5 ம் பந்திக்கு இப்பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளினதும் கவனம் வேண்டப்படுகிறது :—

**திணைக்களப் பரீட்சைகள் (உயர்ச்சி, வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் உட்பட்டது)**

அரசாங்க சேவையிற் சேர்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு உத்தியோகத்தர் தோற்றிய மொழி அல்லது அரசகரும் மொழியே உயர்ச்சிக்கான பரீட்சைகளுக்கும், வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளுக்குமான மொழியாகும். தொடக்க ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சையொன்றின்றி நடைபெற்றிருக்கும் விஷயத்தில், உத்தியோகத்தர் அரசாங்க சேவையில் சேர்வதற்குத் தகைமை பெற்ற மொழி அல்லது அரசகரும் மொழியே உயர்ச்சி, வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளுக்கான மொழியாகும்.

5. (1) தாபனக் கோவை

(2) கணக்கியல்

(3) சட்டம்

(4) நிதி

(5) நிருவாகம்

(6) பொருளியல்

(7) சமூகவியல்

ஆகிய வினாத்தாள்களுக்கு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் பரீட்சார்த்திகள் விடையெழுதுவதற்கான ஒழுங்குகள் பரீட்சை ஆணையாளரால் செய்யப்படும்.

6. தான் தோற்றுவதற்குரியதல்லாத ஒரு மொழியில் பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்றியது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், அவரது பரீட்சார்த்தித் தன்மை நீக்கப்படும்.

7. இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ள படிவத்திற்கிணங்க, ஒரு முழுத் தாளின் அரைத் தாளில் பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். **தாளின் இரு பக்கங்களும் உபயோகிக்கப்பட வேண்டும்.**

8. பரீட்சை, பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படும் : பரீட்சார்த்திகள் அவரால் விதிக்கப்படும் பரீட்சை நடத்துவதற்கான விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டவராவர். இவ்வறிவித்தலினிறுதியில் இவ் விதிகளும் பிரமாணங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

9. 22.3.73 ந் தேதி அல்லது அதற்கு முன்னர் கொழும்பு 2, மலே வீதி, பரீட்சை ஆணையாளரை அடையத்தக்கதாகப் பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர் மூலமாகப் **பதிவுத் தபாலில்** அனுப்பி வைத்தல் வேண்டும். அத்தினத்திற்குப் பின்னர் பெறப்படும் ஏதும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

10. பரீட்சைத் தினத்துக்குக் குறைந்த பட்சம் எழு நாட்களுக்கு முன்னுகவாவது பரீட்சார்த்தியொருவர் தனது அனுமதிப் பத்திரத்தைப் பெறுதிருந்தால், கொழும்பு 2. தபால் பெட்டி 1503, மலாய் வீதி (தந்தி விலாசம் : "எக்சாம்ஸ்" கொழும்பு) என்ற விலாசத்திலுள்ள பரீட்சை ஆணையாளரோடு தாமதமின்றித் தொடர்பு கொண்டு தனக்கு அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லையென்பதைப் பின்வரும் தகவல்களுடன் அறிவித்தல் வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர் ;

(2) முழுப் பெயர் ;

(3) முழுத் தபால் விலாசம் ;

(4) தபாற் கந்தோரும், பதிவிலக்கமும் விண்ணப்பம் அனுப்பிய தேதியும்.

அண்மையிலுள்ளவர்கள் பரீட்சை ஆணையாளருடன் ("ஈ" கிளை) தூதுவர் மூலம் தொடர்பு கொள்ளும்படி ஆலோசனை கூறப்படுகிறார்கள்.

11. மேலே 10 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டவாறு, இத்தேவைகளுக்கிணங்கத் தவறும் பரீட்சார்த்திகளால் செய்யப்படும் பிற்பட்ட கடிதத் தொடர்புகள் கவனத்திற்கெடுத்துக்கொள்ளப்படமாட்டா.

12. அடையாள அட்டைகளின் உபயோகம் தொடர்பாகப் பரீட்சை ஆணையாளரால் வழங்கப்பட்ட 29.06.71 இல் எஸ்ஈ. 274 ஆம் இலக்க **சுற்றறிக்கை பரீட்சார்த்திகள் யாவரினதும் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை நிரூபிப்பது பரீட்சார்த்திகளின் பொறுப்பாகும்.**

13. பின்வரும் அடிப்படையில், இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கட்டணங்கள் அறவிடப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது :—

(அ) முதல் அமர்வு—கட்டணமெதுவுமில்லை.

(ஆ) பிற்பட்ட ஒவ்வொரு அமர்விற்கும்—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| முழுப் பரீட்சை | .. .. | 30 | 0 |
| ஒரு பாடம் | .. .. | 10 | 0 |
| வாய்மொழித் தேர்வு | .. | 5 | 0 |

கட்டணங்கள் பரீட்சார்த்தியின் கையொப்பம் இடப்பட்டு மதிப்பு நீக்கம் செய்யப்பட்ட அரசிறை முத்திரைகளில் செலுத்தப்பட வேண்டும்.

இப்பரீட்சைக்கு ஏற்கெனவே தோற்றியுள்ள பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்த வேண்டப்படுகிறார்கள்.

பி. மகாதேவா,
பதில் அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதி.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7.
1973 ம் ஆண்டு ஜுலை மீ 19 ந் உ.

**விண்ணப்பப் படிவம்**

பரீட்சைத் திணைக்களம், இலங்கை

**இலங்கை நிருவாக சேவை, கடல்கடந்த சேவை, ஏனைய அரச சேவைகள் (வைத்திய சேவை தவிர்ந்த) உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை—ஏப்பிரில் 1973**

பதிவுத் தபாலில் திணைக்களத் தலைவர் மூலமாக. கொழும்பு 2, மலே வீதி, பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பப்படவேண்டியது.

பரீட்சையின் பெயர் கடித உறையின் இடதுபுற மேற்பக்க மூலையில் எழுதப்படுதல் வேண்டும்.

1. (அ) முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர் : ————.
(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் : ————.

2. பிறந்த திகதி : ————.

3. பதவிப் பெயர் : ————.
திணைக்களத்தின் பெயர் : ————.

4. தபால் விலாசம் (அனுமதிப் பத்திரம் அனுப்பப்படுதற்காக) :————

5. இ.நி.சே. உத்தியோகத்தரெனின், உத்தியோகத்தர் இ.நி.சே. க்கு நியமிக்கப்பட்ட திகதி : ————.

6. இ.நி.சே. அல்லாத உத்தியோகத்தரெனின், உத்தியோகத்தருக்குச் சொந்தமான சேவை : ————.

7. இ.நி.சே. உத்தியோகத்தரெனின், உத்தியோகத்தர் விண்ணப்பிக்கும் பரீட்சை : ————.
(பொருந்தாதவற்றை நீக்கிவிடுக)
(அ) முதலாம் வினைத்திறமை காண் தடைப்பரீட்சை (அ)
(ஆ) முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (ஆ) 30.09.71இல் சேவையிலிருந்த இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கானது ;
(இ) இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை ;
(ஈ) இரண்டாம் மொழிப் பரீட்சை.

8. இ.நி.சே. அல்லாத உத்தியோகத்தரெனின், உத்தியோகத்தர் விண்ணப்பிக்கும் பரீட்சை : ————.
(பொருந்தாதவற்றை நீக்கிவிடுக)

**கடல் கடந்த சேவை :**
(அ) முதற் பரீட்சை ;
(ஆ) இரண்டாம் பரீட்சை.

**திணைக்களப் பரீட்சை**
திணைக்களம் :—

9. தோற்றும் பாடங்கள் (தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்)
(i) : ————.
(ii) : ————.
(iii) : ————.
(iv) : ————.
(v) : ————.
(vi) : ————.
(vii) : ————.
(viii) : ————.

10. உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி : ————.

11. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்குத் தோன்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக ; அவ்வாறெனின் பாடங்களையும், வருடத்தையும், மாதத்தையும் தருக : ————.

12. மேலே கூறப்பட்ட விபரங்கள் சரியானவையென்றும், மேலே 10 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரித்துடையவரென்றும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

*இவ்விண்ணப்பத்தில் ஒட்டப்பட்ட முத்திரைகள் பெறுமானமுள்ளவையெனவும், என்னால் மதிப்பு நீக்கம் செய்யப்படுவதற்கு முன்னர் பாவிக்கப்பட்டாதவையென்றும் மேலும் உறுதிப்படுத்துகிறேன்.

முத்திரைக் கூடு

பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி : ————.

பரீட்சை ஆணையாளர்,

அனுப்பப்படுகிறது.

இதனுள் விபரங்கள் காணப்படும் பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றத் தகவுடையவரென்றும் 10 ஆம் பந்தியில் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகவுடையவரென்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

*முத்திரை/கள் முறையாக ஒட்டப்பட்டுப் பரீட்சார்த்தியால் மதிப்பு நீக்கம் செய்யப்பட்டது/பட்டன என மேலும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

பரீட்சார்த்தியின் கையொப்பத்தை நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

...................

திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப்பெயரும்.

திகதி : ————.

*(கட்டணம் கட்டப்படத் தேவையற்றவர் விஷயத்தில் நீக்கப்படலாம்).

**பரீட்சைத் திணைக்களம், இலங்கை**

பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ளவேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) மூலப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்துவைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தைபற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், பொது நிருவாக உள்ளூராட்சி உண்ணாட்டலுவல்கள் அமைச்சினுற் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

**விதிகள்**

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணுது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானல் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்தாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தை தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவார். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாருக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினுத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றைத்தாளிலோ வினுத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணுக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினுவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ் விதிக்கு மாருக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினுக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிபாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினேடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ

மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ கணிதக் கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை, அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப் பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துக்குள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் எவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பார். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக் கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்க கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ உதவி பெறவும் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட்ட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமாகக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு—**

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக் கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—*

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன் நாளே விசாரித்து அறிந்துகொள்ளவேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுதற்குரி தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள் கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவித்தல் வேண்டும். உமக்கெனக் கொடுப்படாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடுகள் விடப்படவேண்டும். முழுவிடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்படவேண்டும் அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டுருபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது, கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமேனால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள், தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும் அல்லது இவர்களில் ஒருவர் வந்து எற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப் பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகர்களிடமோ பணியாளரிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்டவேண்டும்.

போகொட பிரேமரத்தின,
பதில் பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு 2,

3–398—09.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 50

---

**அம்பாறை, ஹார்டி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்திற் சேர அனுமதிகோரும் விண்ணப்பம்**

அம்பாறை, ஹார்டி சிரேட்ட தொழில் நுட்ப நிலையத்தில் 1973 ஆம் கல்லூரி ஆண்டில் நடைபெறவிருக்கும் கட்டிடங்களில் மின்சார இணைப்பு வேலை தொடர்பான ஒரு வருடப் பகுதி நேரப் பயிற்சி நெறிக்கு தகுதிபெற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பயிற்சிநெறி தமிழ், சிங்கள போதனாமொழிகளில் நடைபெறும்.

2. தகவுத்திறன்

(அ) பரீட்சார்த்திகள் 1.1.1973 தேதியன்று 17 க்குக் குறையாத வயதினராய் இருக்க வேண்டும்.

(ஆ) தற்சமயம் மின்சாரத் தொழிலில் ஈடுபட்டவராய் இருக்க வேண்டும்.

(இ) கல்வித்தகைமைகள்—8 ஆந் தரம் அல்லது 8 ஆம் வகுப்பு அல்லது கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பு சித்தியெய்தியிருக்க வேண்டும். (அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் கடமை புரிவோருக்கு இவ்விதி தளர்த்தப்படும்)

3. வாரத்திற்கொருமுறை சனிக்கிழமை பிற்பகல் வேளைகளில் வகுப்புக்கள் நடைபெறும்.

4. இந்நிலையத்தில் பயிற்சி நெறிக்காக ஆண்கள் மாத்திரமே சேர்க்கப்படுவர்.

5. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையிலேயே தயாரிக்கப்படுதல் வேண்டும். (அச்சிடப்பட்ட படிவங்கள் வழங்கப்படமாட்டா).

6. விண்ணப்பங்கள், பதிவாளர், ஹார்டி சிரேட்ட தொழில் நுட்ப நிலையம், அம்பாறை, என்ற விலாசத்திற்கு 1973 மார்ச் மாதம் 30 ஆந் தேதிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியனவாய் அனுப்பப்படல் வேண்டும்.

7. இந்தப் பயிற்சி நெறிக்காக ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

8. ஒவ்வொரு கல்லூரி ஆண்டினதும் குறித்த 9 மாதங்களுக்கு மாதம் 5/- ரூபா வீதம் மாணவர்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படும்.

ரீ. ஓ. பீ. பர்னாந்து,
கல்விப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்),
கல்வி மா அதிபதிக்காக.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.
1973 பெப்ருவரி 28 ஆந் திகதி.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**அம்பாறையிலுள்ள ஹார்டி சிரேட்ட தொழில் நுட்ப நிலையத்தில் பகுதிநேர மின்சார. இணைப்புப் பயிற்சிநெறியிற் சேர அனுமதி கோரும் விண்ணப்பம்**

குறிப்பு—மேலேயுள்ள அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள வயதுக் கட்டுப்பாடு, கல்வித் தகைமை ஆகியவற்றுக்குக் கண்டிப்பாக அமையப்பட்டுள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

1. முழுப்பெயர்.————.
(தெளிவான எழுத்துக்களில்)
2. தபால் முகவரி.————.
3. பிறந்த தேதி.————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் ஒரு பிரதியை இணைக்குக-மூலப்பிரதியையல்ல)
4. 1.1.1973 ஆந் தேதியன்றுள்ளபடி வயது. வரு. மா. நா.————.
5. தேசிய இனம்.————.
6. சித்தியெய்திய மிக உயர்ந்த பரீட்சை.————.
7. விண்ணப்பதாரர் தமது பரீட்சைகளில் சித்தியெய்திய வித்தியாலயம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலையின் பெயரும் விலாசமும்.————.

————————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி:————.

3-383—09.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 50

---

### இலங்கை நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காய யாவர்க்கும் உரிய போட்டிப் பரீட்சை-1972

#### திருத்தம்

1972 டிசம்பர் 8 ந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மேற்கூறிய பரீட்சை சம்பந்தமான அறிவித்தல் 1973 சனவரி 5 ந் திகதிக்குரிய இலங்கைக் குடியரசு வர்த்தமானியில் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டமை மேலும் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

1. பரீட்சைத் திகதி : பகுதி (ஏ) நீக்கற் பரீட்சை-முன்னர் அறிவிக்கப்பட்ட தேதியாகிய 1973 மார்ச்சு 28 ந் திகதியல்லாது 1973 ஏப்பிரல் 28 ந் திகதி நடைபெறும்.

2. பரீட்சைத் திட்டம் :

பரீட்சைத் திட்டத்தின் பகுதி (ஏ) நீக்கற் பரீட்சை-பின்வரும் வசனத் தொகுதியாகிய

"பரீட்சார்த்திகள் பகுதி(பீ) ஆகிய பரீட்சைக்குத் தகுதியடைவதற்கு பகுதி (ஏ) இல் உள்ள மூன்று பாடங்களிலும் 50 சத வீதத் தரத்தை அடையவேண்டும்" என்னும் வசனத் தொகுதியை நீக்கி அதற்குப் பதிலாக மேல் வரும் வசனத் தொகுதியாகிய "ஒவ்வொரு பாடத்திலும் போதிய அளவு உயர்தரப் புள்ளிகளை எடுக்கும் பரீட்சார்த்திகளே பகுதி (பீ) ஆகிய தெரிவுப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவராவர்.

வெற்றிடங்களில் இருமடங்குகளைக் கொண்ட எண்ணிக்கையுடைய பரீட்சார்த்திகள் பகுதி (பீ)ப் பரீட்சைக்குத் தோற்றக் கூடியதாக இருக்குமாறு பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பாடத்திலும் கட்டாயமாக எடுக்க வேண்டிய புள்ளிகள் ஒரு சதவீத நிலையில் நிலைப்படுத்தப்படும்" என்னும் வசனத் தொகுதியைச் சேர்த்தல் வேண்டும்.

பீ. மகாதேவ,
செயலாளர்,
பொது நிருவாக உள்ளூராட்சி உண்ணாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாக உள்ளூராட்சி உண்ணாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7.
27 பெப்ரவரி 1973.

2-399—09.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 50

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை )குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாச்சு | .. | 2.3.73 | வெள்ளி | .. | 21. 2.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 9.3.73 | வெள்ளி | .. | 28. 2.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 16.3.72 | வெள்ளி | .. | 7. 3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 23.3.73 | வெள்ளி | .. | 14. 3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 30.3.73 | வெள்ளி | .. | 21. 3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| ஏப்பிறல் | .. | 6.4.73 | வெள்ளி | .. | 28. 3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 11.4.73 | புதன் | .. | 4. 4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 19.4.73 | வியாழன் | .. | 11. 4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 27.4.73 | வெள்ளி | .. | 18. 4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |

**எல். டப்ளியூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஒகத்து மீ 18 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.